ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## மூன்றாம் வகுப்பு

(முதல் பருவம்)

ஆசிரியர்

**குரும்பை உலகநாதன்**

மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
முதல் பதிப்பு : 2020(பொதுப் பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை

**“செந்தமிழ் வாசகம்”** என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த “செந்தமிழ் வாசகம்”. தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறன் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (“CCE METHOD”) நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினை பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்



# பொருளடக்கம்




| வ.எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | தமிழ் அமுது | 5 |
| 2. | பாரி செய்த உதவி | 11 |
| 3. | தனித்திறமை | 16 |
| 4. | கல்யாணமாம் கல்யாணம்! | 25 |
| 5. | நெகிழியை ஒழிப்போம் | 30 |
| 6. | முயற்சி திருவினையாக்கும் | 38 |
| 7. | சான்றோர் மொழி | 44 |
| 8. | நூலகம் | 48 |
| 9. | மாட்டு வண்டியிலே ..... | 55 |
| | அகரமுதலி | 62 |




# 1 தமிழ் அமுது

தோண்டுகின்ற போதெல்லாம்
சுரக்கின்ற செந்தமிழே!
வேண்டுகின்ற போதெல்லாம்
விளைகின்ற நித்திலமே!
உன்னைத் தவிர
உலகில் எனைக் காக்க
பொன்னோ! பொருளோ!
போற்றி வைக்க வில்லையம்மா!

- கவிஞர் கண்ணதாசன்



கவிஞர் கண்ணதாசன்

## பாடல் பொருள்

தோண்டுகின்ற
பொழுதெல்லாம் நீர்
ஊற்றைப்போல் சுரக்கின்ற
செந்தமிழே! தேவைப்படும்
பொழுதெல்லாம் விளைகின்ற முத்தே!
உன்னை அன்றி இவ்வுலகில் என்னைக்
காக்க வேறு பொன்னையோ
பொருளையோ சேர்த்து வைக்கவில்லை,
என்னைக் காத்திடுவாய் அம்மா.

## உரையாடலாம் வாங்க!

உங்களுக்குப் பிடித்தவர்களைப் பற்றி பேசுங்கள்.
"தமிழுக்கும் அமுதென்று பேர்" - என்ற பாடலைப் பாடலாம் வாங்க.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. நித்திலம் இச்சொல்லின் பொருள் ..........................
   (அ) பவளம் (ஆ) முத்து (இ) தங்கம் (ஈ) வைரம்

2. செந்தமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................
   (அ) செம்மை + தமிழ் (ஆ) செந் + தமிழ் (இ) செ + தமிழ் (ஈ) செம் + தமிழ்

3. உன்னை + தவிர என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................
   (அ) உன்னைத் தவிர (ஆ) உனைத்தவிர (இ) உன்னை தவிர (ஈ) உனை தவிர

**இப்பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோமா...**

தோண்டுகின்ற - வேண்டுகின்ற

__________ __________

அச்சம் - மச்சம்

__________ __________

__________ __________

### ஆசிரியர் குறிப்பு



ஆசிரியர் : கவிஞர் கண்ணதாசன்
பெற்றோர் : விசாலாட்சி ஆச்சி, தந்தை சாத்தப்பா.
காலம் : 1927 முதல் 1981 வரை
பிறந்த ஊர் : சிறுகூடல்பட்டி

## வினாவிற்கு விடையளி.

1. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?
2. கவிஞர் கண்ணதாசனின் பிறந்த ஊர் எது?

**கலைந்துள்ள எழுத்துகளை வரிசைப்படுத்திச் சொல்லை உருவாக்குக.**

எ.கா

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | பொ | ள் | ன் | பொ | ரு | பொன்பொருள் |
| 2. | செ | ழ் | மி | த | ந் | |
| 3. | ண | வ | கு | ங் | | |
| 4. | போ | றி | ற் | | | |
| 5. | தி | ம் | த் | ல | நி | |
| 6. | உ | கி | ல் | ல | | |

## நாபிறழ் பயிற்சி

உ. உரிய ஒலிப்புடன் மீண்டும் மீண்டும் சொல்லிப் பழகுங்கள். பிழையின்றி யார் பலமுறை கூறுகிறார்கள் எனப் போட்டியிடுங்கள், வெல்லுங்கள்.

ஆடுற கிளையில்
ஒரு கிளை தனிக்கிளை.
தனிக்கிளை தனில் வந்த
கனிகளும் இனிக்கல.

கடலோரத்தில் அலை
உருளுது புரளுது, தத்தளிக்குது
தாளம் போடுது.



வீட்டுக் கிட்ட கோரை
வீட்டுக்கு மேல கூரை
கூரை மேல நாரை

ரெண்டு சோள தோசையில
ஒரு சோள தோசை
சொந்த சோள தோசை

## ஆடிப் பாடி மகிழ்வோம்!



அச்சம் தவிர்.

ஆண்மை தவறேல்.

இளைத்தல் இகழ்ச்சி.

ஈகை திறன்.

உடலினை உறுதிசெய்.

ஊண் மிக விரும்பு.

எண்ணுவதுயர்வு.

ஏறுபோல் நட.

ஐம்பொறி ஆட்சிகொள்.

ஒற்றுமை வலிமையாம்.

ஓய்த லொழி.

ஔடதங் குறை.

எஃகாய் உறுதி கொள்.



1. என் நாடு ........................................
2. என் மாநிலம் ........................................
3. என் மாவட்டம் ........................................
4. என் ஊர் ........................................
5. என் மொழி ........................................
6. என் பள்ளி ........................................
7. என் வகுப்பு ........................................
8. என் ஆசிரியர் ........................................
9. என் நண்பர்கள் ........................................
10. வீட்டில் எனக்குப் பிடித்தவை ........................................
11. பள்ளியில் எனக்குப் பிடித்தவை ........................................
12. எனது திறமைகள் ........................................
13. என் பெற்றோர் ........................................
14. பெற்றோர் அலைபேசி எண் ........................................



## மொழியோடு விளையாடலாம்

ஆசிரியர் மாணவர்களிடம் நான் நினைக்கும் ஒரு சொல்லை கண்டுபிடிக்க வேண்டும் முடியுமா? என்று கேளுங்கள். இயல்பான விளையாட்டாகவே இருக்கலாம்.

குழந்தைகளை ஆசிரியர் வட்டமாகவோ "ப" வடிவத்திலோ அமரச் செய்யலாம். விளையாட்டில் ஒருவருக்கு ஒரே வாய்ப்பு மட்டுமே வழங்கப்படும். ஆசிரியர் நினைக்கும் பொருளை மாணவர்கள் கூற வேண்டும். அந்த பொருளை கண்டறிய தான் சில குறிப்புகளை ஆசிரியர் கூற வேண்டும். ஆசிரியர் சொல்லும் குறிப்புகளை வைத்து அந்தப் பொருளை மாணவர்கள் கண்டறிய வேண்டும்.

மூன்று சொற்றொடர்களை மாணவர்களிடம் கூற வேண்டும். அவற்றை வைத்து அது என்ன பொருள் என்பதை கண்டறிய வேண்டும்.

எ.கா : கம்பீரமான விலங்கு. கர்ஜிக்கும் விலங்கு.
நம் தேசிய விலங்கு. அது என்ன? புலி

1. வட்ட வடிவில் இருக்கும். வரிசையாக இருக்கும்.
   நம் சட்டைகளில் இருக்கும். அது என்ன?
2. வட்டமாக இருக்கும். வானில் வரும்.
   இரவில் தெரியும். அது என்ன?
3. பச்சை வண்ணம். பறவை இனம்.
   பேசும் என்பார்கள். அது என்ன?

இதே போல் இன்னும் நிறைய கூறலாம்.

## செயல் திட்டம்

கேட்டு, எழுதி வரலாமா...

தமிழ் மொழியின் சிறப்பை வெளிப்படுத்தும் பாடல்கள் இரண்டை எழுதி வருக

## 2 பாரி செய்த உதவி



பாரியும், அவனுடைய தாத்தாவும், காலை வேளையில் நடைப்பயிற்சி சென்றார்கள். அவர்கள் பேசிக்கொண்டே சாலை வழி சென்றார்கள். தாத்தா, அவர் சிறுபிள்ளையாக இருக்கும்போது சாலையின் இரண்டு பக்கங்களிலும் மரங்கள் நிறைய இருந்தது என்றும், ஆனால், தற்போது அவற்றை எல்லாம் வெட்டிவிட்டு சாலையை அகலப்படுத்தி விட்டார்கள் என்றும் கூறினார்.

தாத்தாவின் கையைப் பிடித்தபடியே பாரி நடந்து சென்றான். அப்போது எதிரே ஒரு பேருந்து வேகமாக வந்தது. பேருந்தின் எதிர்புறம் வந்த மகிழுந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பேருந்தின் மேல் பயங்கர சத்தத்துடன் மோதியது. அதனைப் பார்த்த பாரி அலறித் துடித்தான்.

பாரியிடம் தாத்தா, பாரி! இது போன்ற நேரங்களில் நாம் பதற்றம் அடையவோ, பயப்படவோ கூடாது. நிதானத்துடன் செயல்பட்டு நம்மால் இயன்ற உதவிகளை வேகமாகச் செய்ய வேண்டும் என்றார். தன் சட்டைப்பையில் இருந்து கைபேசியை எடுத்தார். 108 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு பேசினார். சிறிது நேரத்தில் அவசரகாலஊர்தி வந்தது. காவலர்களும் அங்கு வந்தனர். காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அப்போது பாரி, அருகில் சென்று தன்னால் இயன்ற உதவிகளை அவர்களுக்குச் செய்தான். பேருந்தில் இருந்த அனைவரும் காப்பாற்றப்பட்டனர். மகிழுந்தில் இருந்தவர்களும் காப்பாற்றப்பட்டனர்.




அதன் பிறகு தாத்தாவுடன் பாரி வீட்டிற்கு சென்றான். பின்பு பள்ளிக்குச் சென்றான். பள்ளிக்கு தாமதமானதால் பாரி வேகமாக ஓடினான். அப்போது பள்ளியில் வழிபாட்டுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாரி வருவதைக் கண்ட தலைமைஆசிரியர் அவனை மேடைக்கு வருமாறு அழைத்தார்.



காலதாமதமானதால், பாரி பயந்து கொண்டே வழிபாட்டு மேடைக்குச் சென்றான். தலைமைஆசிரியர் காலையில் தான் நடைப்பயிற்சியில் இருந்த போது, சாலையில் நடந்த விபத்தைப் பற்றியும், அது சமயம் அங்கிருந்த பாரியும், அவன் தாத்தாவும் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்த உதவி பற்றியும் விளக்கமாகக் கூறினார்.

சமயோசிதமாக பாரியின் தாத்தா கைபேசியில் தொடர்பு கொண்டு அவசரஊர்தியை உதவிக்கு அழைத்ததைப் பற்றிக் கூறினார். அது மட்டுமல்லாமல், பாரியும், அவனது தாத்தாவும் விபத்துக்குள்ளானவர்களுக்கு விரைந்து செய்த உதவிகளைப் பற்றியும், பாராட்டிப் பேசினார். பாரியின் உதவும் குணத்தைக் கண்டு தாம் நெகிழ்ச்சி அடைந்ததாகவும் கூறினார்.

மாணவர்களே! பிறருக்கு உதவி செய்வதே நமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தரும் என்று தலைமைஆசிரியர் கூறினார் . சகமாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாரிக்கு கைத்தட்டி பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

## உரையாடலாம் வாங்க!



நீ யாருக்கேனும் உதவி செய்தது உண்டா? என்ன உதவி என்று கூறுக.

உனது ஊரில் 108 வாகனத்தைப் பார்த்தது உண்டா? எப்போது எதற்காக அந்த வண்டி வரும்?

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. நிதானம் என்ற சொல் உணர்த்தும் பொருள் ........................................

(அ) பொறாமை (ஆ) பொறுமை (இ) அழுகை (ஈ) பயம்

2. அவசரஊர்தி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................

(அ) அவ + சர ஊர்தி (ஆ) அவசரம் + ஊர்தி

(இ) அவச + ர ஊர்தி (ஈ) அ + வசர ஊர்தி

3. மருத்துவமனை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

(அ) மருத்து + மனை (ஆ) மருத்துவம் + மனை

(இ) மருந்து + மனை (ஈ) மருத்துவ + மனை

4. தாமதம் என்ற சொல்லின் பொருள் ..................................................

(அ) காலை (ஆ) நேரம் தாழ்த்துதல்

(இ) இரவு நேரம் (ஈ) பகல் வேளை

5. பாரியுடன் நடைபயிற்சி சென்றவர் ..................................................

(அ) தாத்தா (ஆ) அப்பா

(இ) தலைமை ஆசிரியர் (ஈ) மாமா

## கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி

1. பாரி யாருடன் எங்கு சென்றான்?

2. சாலையில் என்ன நடந்தது?

3. தாத்தா எந்த எண்ணிற்கு கைபேசியில் பேசினார்?

4. பாரியை வழிபாட்டுக்கூட்டத்தின் போது தலைமைஆசிரியர் ஏன் அழைத்தார்?

5. பாரியும் தாத்தாவும் செய்த உதவி பற்றி உனது கருத்தைக் கூறு.

## அகர முதலியைப் பார்த்துப் பொருள் வேறுபாடு அறிக

1. வலி : ..............................

2. வளி : ..............................

3. வழி : ..............................

4. தளை : ..............................

5. தழை : ..............................

6. தலை : ..............................

7. கலை : ..............................

8. களை : ..............................

9. கழை : ..............................

## சரியான சொல்லால் நிரப்பிப் படி

1. ஒட்டகம் பொதுவாக ..........................ல் வாழும்.
2. ஒட்டகம் அதிகமான நாட்கள் ................ ................. இன்றி உயிர் வாழும்.
3. ஒட்டகம் தனக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீரை ..........................பகுதியில் சேமிக்கும்.
4. ஒட்டகத்திற்கு ...................... வயிறுகள் உண்டு.
5. ஒட்டகத்தின் தோல் .................... பயன்படுகிறது.

( உணவு நீர், தசைமுண்டு, மூன்று, பாலைவனத்தில், வெப்ப தடுப்பானாக )



## சொல் விளையாட்டு :

ஆப்பிளில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

எ.கா: நகை

1. | | |
2. | | |
3. | | | | |
4. | | | | |
5. | | | | |
6. | | | | |




## கலந்துரையாடி தெளிவோம்



# 3 தனித்திறமை

காட்டுராஜாவான சிங்கம் சில நாட்கள் ஓய்வெடுக்க நினைத்தது. தனது பொறுப்புகள் அனைத்தையும் புலியிடம் ஒப்படைத்து விட்டுச்சென்றது. புலியும் ராஜாவாகப் பதவியேற்றுக் கொண்டது. சிங்கக்குட்டி படைத்தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.















கழுதையாருக்கு
என்ன பதவி
தரலாம் .....


ராஜாவே..! ராஜாவே..!
கழுதை என்றும்
முட்டாள் தான்.
அதனால் ஒரு பயனும்
இல்லை.


அப்படியா.....!


மேலும் இது போல்
ஆமை, முயல் இரண்டும்
எதற்கும் பயன்படாது.




பண்புகளை வளர்த்தல்

**நீதிக் கருத்து :**

ஒவ்வொருவருக்கும் தனித்திறமை உண்டு. அதை அறிந்து சூழ்நிலைக்கு ஏற்பப் பயன்படுத்த வேண்டும்.

## உரையாடலாம் வாங்க!



காட்டின் அரசனாக சிங்கமே இருக்க வேண்டுமா?
புலி காட்டுக்கு அரசனாக இருப்பது குறித்து
உனது கருத்து என்ன?
வகுப்பறையில் விவாதிக்க....

## சிந்தித்து விடை கூறுவோம்

### சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. தகுதி இச்சொல் உணர்த்தும் பொருள் ..........................................................

(அ) தரம் (ஆ) மரம்
(இ) கரம் (ஈ) வரம்

2. பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் ..................................................

(அ) நண்பர்கள் (ஆ) எதிரிகள்
(இ) அயலவர்கள் (ஈ) சகோதரர்கள்

3. பணி இச்சொல் உணர்த்தும் பொருள் ......................................................

(அ) வாழை (ஆ) வேளை
(இ) வேலை (ஈ) வாளை

4. படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................

(அ) படைத் + தளபதி (ஆ) படை + தளபதி
(இ) படையின் + தளபதி (ஈ) படைத்த + தளபதி

5. எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........

(அ) எதைபார்த்தாலும் (ஆ) எதபார்த்தாலும்
(இ) எதைப்பார்த்தாலும் (ஈ) எதைபார்தாலும்

## வினாக்களுக்கு விடையளி

1. காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?

2. புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?

3. ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?

4. கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?

5. இந்த கதையின் மூலம் நீ அறிந்து கொள்வது யாது?

6. கழுதையின் பணி என்ன?

### புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக.

மரத்துக்கு மரம் தாவுவான்.
குரங்கும் அல்ல, பட்டை போட்டிருப்பான்.
சாமியும் அல்ல, அவன் யார்?



ஆடி ஆடி நடப்பான்,
அகிலம் அதிர நடப்பான்.
அவன் யார்?



வாயிலிருந்து நூல் எடுப்பான்.
மந்திரவாதியும் இல்லை.
வலை விரித்துப் பதுங்கி இருப்பான்.
வேடனும் இல்லை. அவன் யார்?



முதுகிலே சுமை தூக்கி
முணங்காமல் நடந்து வருவான்.
அவன் யார்?



முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக.

1. காட்டில் விலங்குகள் நடந்தது கூட்டம்

2. இரவுக்காவல் நீங்கள்தாம் அமைச்சர் ஆந்தையாரே

3. முயல் ஓடும் வேகமாக அதி

4. கூடாது யாரையும் போடக் எடை குறைவாக

## எந்த விலங்கிற்கு, எந்தப் பணி?

| விலங்குகள் | | பணிகள் |
|---|---|---|
| 1.  | - | பொருள்களைச் சேகரிக்கும் வேலை |
| 2.  | - | எச்சரிக்கைப் பணி |
| 3.  | - | படைத்தளபதி |
| 4.  | - | இரவுக்காவல் |
| 5.  | - | சமையல் வேலை |

## பெயர் எது? செயல் எது?

| | பெயர் | செயல் |
|---|---|---|
| 1. நந்தினி புத்தகம் வாசித்தாள். | ........................ | ........................ |
| | ........................ | |
| 2. கண்ணன் மரம் ஏறினான். | ........................ | ........................ |
| | ........................ | |
| 3. பூனை பாலைக் குடித்தது. | ........................ | ........................ |
| | ........................ | |



### தமிழோடு விளையாடு

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். முதல் குழுவினருக்கு விலங்குகள் மற்றும் பறவைகளின் பெயர் எழுதப்பட்ட அட்டையினை ஒவ்வொரு மாணவனுக்கும் ஒன்று வீதம் கொடுக்க வேண்டும். ஆசிரியர் ஒலிப்பான் மூலம் ஒலி எழுப்பியவுடன் முதல் குழுவில் இருந்து ஒரு மாணவன் தனது அட்டையில் எழுதப்பட்டு உள்ள விலங்கு (அ) பறவை போல நடித்து (அ) ஒலி எழுப்பிக் காட்ட வேண்டும். நடிக்கும் விதத்தை (அ) ஒலியைக் கேட்டு அது என்ன விலங்கு (அ) பறவை? என்பதனை இரண்டாவது குழுவினர் கண்டறிந்து கூற வேண்டும்.

இவ்வாறே அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

## எழுத்துகளின் வகைகள் அறிவோம்

மாணவர்களே! நமக்கெல்லாம் பெயர் இருக்கிறது அல்லவா!.

அதுபோல எழுத்துகளுக்கும் பெயர் உண்டு.

தமிழில் உள்ள உயிரெழுத்துகள் மொத்தம் - 12

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

இதில்




அ இ உ எ ஒ



எ.கா. ( சொற்களுடன் ) அம்மா, இட்லி, உரல், எலி, ஒன்று

இந்த ஐந்து எழுத்துகளும் ஓசையில் குறுகி ஒலிக்கின்றன எனவே இவற்றிற்குக் குறில் அல்லது குற்றெழுத்துகள் என்று பெயர.






ஆ ஈ ஊ ஏ ஐ ஔ

எ.கா. ஆடை, ஈரம், ஊசல், ஏணி, ஐவர்

இந்த ஏழு எழுத்துகளும் ஓசையில் நீண்டு ஒலிக்கின்றன இவற்றிற்கு நெடில் அல்லது நெட்டெழுத்துகள் என்று பெயர்.

இப்பொழுது மெய்யெழுத்துகள் பற்றி அறிவோம்.
தமிழில் உள்ள மெய்யெழுத்துகள் மொத்தம் - 18

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப்

ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

இவை ஒலிக்கும் தன்மையை வைத்து மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

## வல்லினம்

| க் | ச் | ட் | த் | ப் | ற் |
|---|---|---|---|---|---|



யானைகள் எப்படி வலிமையாக இருக்கின்றனவோ அப்படியே க், ச், ட், த், ப், ற் - என்ற எழுத்துக்களும் வலிய ஓசை உடையவை. எனவே இவற்றுக்கு வல்லினம் என்று பெயரிடுவோம்.

## மெல்லினம்



| ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் |
|---|---|---|---|---|---|

முயல்கள் எப்படி மென்மையாக இருக்கின்றனவோ அப்படியே ங், ஞ், ண், ந், ம், ன் - என்ற எழுத்துக்களும் மெல்லிய ஓசை உடையவை. எனவே இவற்றுக்கு மெல்லினம் என்று பெயரிடுவோம்.

## இடையினம்

| ய் | ர் | ல் | வ் | ழ் | ள் |
|---|---|---|---|---|---|



மான்கள் யானையைப் போன்று வலிமையாகவும் இல்லை. முயலைப் போன்று மென்மையாகவும் இல்லை, இடைப்பட்ட நிலையில் இருக்கின்றன.

அது போல ய், ர், ல், வ், ழ், ள் - என்ற எழுத்துகளும், வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையதால் இவற்றுக்கு இடையினம் என்று பெயரிடுவோம்.

ஃ என்பது ஆய்த எழுத்து அல்லது தனிநிலை எனப்படும். எழுத்துகளின் பெயர்கள் இனிமையாக இருக்கின்றன அப்படித்தானே.

உங்கள் பெயரிலும் உங்கள் நண்பர்களின் பெயர்களிலும் இடம் பெற்றுள்ள மெய்யெழுத்துக்களை வட்டமிட்டுக் காட்டுக.

# 4 கல்யாணமாம் கல்யாணம்!



பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்
யானை மேலே ஊர்கோலமாம்
ஒட்டகச்சிவிங்கி நாட்டியமாம்
கொர்கொர் குரங்கு பின்பாட்டாம்
தடபுடலான சாப்பாடாம்



தாலிகட்டும் வேளையிலே
மாப்பிள்ளை பூனையக் காணோமாம்
சந்தடி புந்தடி செய்யாமல்
சமையல்கட்டில் நுழைந்தாராம்
வாங்கிவச்சப் பாலையெல்லாம்
ஒரே மூச்சில் குடித்தாராம்



பார்த்துவிட்ட பெண்ணின் தாயும்
பலத்த சத்தம் போட்டாராம்
திருட்டு மாப்பிள்ளைக்கு என் பெண்ணை
திருமணம் செய்ய முடியாது
வேண்டாம் இந்த சம்பந்தம்
வெட்கக்கேடு போய் வாரோம்

- நாட்டுப்புறப் பாடல்

## உரையாடலாம் வாங்க!



இப்பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழ்க.

உனது பகுதியில் வழங்கும் உனக்குப் பிடித்த நாட்டுப்புறப் பாடல்களை அறிந்து வகுப்பறையில் மகிழ்க.

## சிந்தித்து விடை கூறுவோம்

பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.



கல்யாணமாம் ____________________

____________________ ____________________

____________________ ____________________

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. பூலோகமெல்லாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................

(அ) பூலோக + மெல்லாம் (ஆ) பூலோகம் + மெல்லாம்

(இ) பூலோகம் + எல்லாம் (ஈ) பூலோக + எல்லாம்

2. கல்யாணத்தில் நாட்டியமாடுபவர் ..........................................................

(அ) பூனை (ஆ) ஒட்டகச்சிவிங்கி

(இ) யானை (ஈ) குரங்கு

3. பாலை + எல்லாம் இதனை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................

(அ) பாலையெல்லாம் (ஆ) பாலைஎல்லாம்

(இ) பாலைல்லாம் (ஈ) பாலெல்லாம்

## இணைத்து விடையறிவோம்

**பேனாக்களை அவற்றின் சரியான மூடிகளோடு பொருத்துக.**

| | |
|---|---|
| காணோமாம் | வருகிறோம் |
| வாங்கி வச்ச | பூனையை |
| வாறோம் | வாங்கிவைத்த |
| பூனைய | காணவில்லையாம் |

### *சிந்திக்கலாமா?*

இப்பாடலில் வரும்
பூனைக்கும்
பூனைக்கும் பதிலாக
சுண்டெலிக்கும்
சுண்டெலிக்கும்
கல்யாணம் ஏற்பாடு
செய்திருந்தால்
எவ்வாறு இருக்கும்?



வகுப்பறையில் பாடுக...

## வண்ணமிட்டு மகிழ்க



### செயல் திட்டம்

உமது பகுதியில் வழங்கும் நாட்டுப்புறப் பாடல்களை ஏதேனும் இரண்டை அறிந்து வருக.

5

# நெகிழியை ஒழிப்போம்



சிறுமலர் ஆரம்பப்பள்ளி. காலை மணி அடித்தது. பிரார்த்தனைக் கூட்டம் முடிந்து மாணவர்கள் வகுப்பறைக்குச் சென்றனர். மூன்றாம்வகுப்பு ஆசிரியை செங்கமலம் வகுப்பறையில் நுழைந்தார். மாணவர்களின் காலைவணக்கத்தை ஏற்றுக்கொண்டு அன்றைய பாடத்தினைத் துவக்கினார்.

மாணவர்களே!

நம் மனிதகுலத்தையே சீரழிக்கும் நெகிழிப் பயன்பாட்டைப் பற்றி தான் இன்றைய நமது பாடம் "எங்கும் நெகிழி, எதிலும் நெகிழி" என நமது அன்றாட வாழ்க்கையில் நெகிழியின் பயன்பாடு இரண்டறக் கலந்து விட்டது. இன்றைய நாகரீக உலகில் இந்த நெகிழியின் பயன்பாடு நம் வாழ்க்கையில் அனைத்து வகைகளிலும் ஊடுருவி அடிப்படை சுகாதாரத்தையே அழித்துக்கொண்டு வருகிறது. அது பற்றி மேலும் அறிவோம்.

பண்டைய காலங்களில் பொருள்களை வைக்க, எடுத்துச்செல்ல மனிதன் மண்பாண்டங்களைத் தான் பயன்படுத்தினான். நாளாக நாளாக பொருள்களை எடுத்துச் செல்ல துணிப்பை, சணல்பை போன்றவைகளை பெரிதும் பயன்படுத்தினான்.

ஆனால் நெகிழி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு ஏராளமான நெகிழிப்பொருட்கள் பயன்பாட்டிற்கு வந்தன. விலை மலிவாகவும், எடை குறைவாகவும் இருப்பதால் நெகிழியின் பயன்பாடு அதிகரித்தது.

**செழியன்** : டீச்சர்.... இத்தகைய பயன்பாடுகளைக் கொண்ட நெகிழியின் தீமைகளை என்னவென்று கூறுங்கள்.

**ஆசிரியை** : நம்மால் வீதியில் கொட்டப்படும் நெகிழிக்குப்பைகள் சாலை ஓரங்களில் சிதறிக் கிடக்கின்றன. பெருமழை பெய்யும் பொழுது நெகிழிக்குப்பைகள் மழைநீரால் அடித்துச் செல்லப்படுகின்றன. அவை குளங்கள், ஏரிகள், ஆறுகள் என நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கலக்கின்றன. இதனால் எல்லா நீர்வளங்களும் மாசடைகிறது. இந்நீரில் வாழும் உயிரினங்களும் மனிதர்களும் கடும் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். மக்காத தன்மை கொண்ட நெகிழிப்பைகள், நெகிழிப்புட்டிகள் போன்றவற்றை மண்ணில் போடுவதால் அது மண்ணிற்குள் புதைந்து அப்படியே தங்கி விடுகிறது. எவ்வளவு தான் மழை பெய்தாலும், மழைநீரை நிலத்திற்குள் இறங்க விடுவதில்லை. இதனால் நமக்குக் கிடைக்கும் நிலத்தடி நீர் குறைந்து தண்ணீர் பற்றாக்குறை அதிகரிக்கிறது.

**மங்கை** : டீச்சர் .... மனிதர்கள் உண்டபின் போடும் நெகிழிப் பொட்டலங்களை விலங்கினங்கள் ஆவலோடு உண்ணுகிறதே! அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிக்கூறுங்கள்.

**ஆசிரியை** : நாம் உண்டது போக மீதி உணவுடன் போடும் நெகிழிப் பொட்டலங்களை விலங்குகள் உண்ணுவதைப் பார்க்கிறோம். அப்படி உண்ணும் நெகிழிப்பைகள் நாளடைவில் விலங்குகளின் உணவுக்குழாய்களில் தங்கி செரிமானமாகாமல் பாதிக்கப்பட்டு நோயுற்று அவைகள் இறக்க நேரிடுகிறது.

கடலில் மிதந்து கொண்டிருக்கும் கழிவுகளில் தொண்ணூறு சதவீதம் நெகிழிக்கழிவுகளே!

**இராகவன்** : டீச்சர் .... நெகிழிக்குப்பைகளை நாம் எரித்து விடலாம் அல்லவா?

**ஆசிரியை** : நெகிழிக்குப்பைகளை எரிப்பதால் ஓசோன்படலம் பாதிப்படைகிறது. இதனால் புறஊதாக்கதிர்கள் நம்மைத் தாக்குகிறது. இதனால் புற்றுநோய், தோல்நோய் போன்றவை ஏற்படும் அபாயம் உள்ளது.

சுதாகரன் : டீச்சர் .... இந்த நெகிழியை ஒழிக்க வேறு வழியேதும் இல்லையா?



ஆசிரியை : இருக்கிறது சுதாகரன். நம் பகுதியில் குப்பை வண்டிகள் வருவதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அந்த வண்டி களில் நம் வீடுகளில் தரம் பிரித்து வைத்திருக்கும் மட்கும் குப்பை, மட்காத குப்பை ஆகியவற்றை சேர்த்துவிட வேண்டும். மட்கும் குப்பையை உரமாகவும், மட்காத குப்பையை மறுசுழற்சிக்காகவும் அவர்கள் அனுப்பி வைப்பார்கள்.







### தெரிந்து கொள்வோம்

இந்த நெகிழி பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் 'பாலிஎத்திலின்' என்ற துணைப்பொருளாகக் கிடைக்கிறது.

கடைவீதியில் நீங்கள் பொருட்கள் வாங்கச் செல்லும் பொழுது துணிப்பையை எடுத்துச் செல்லுங்கள். நெகிழிப்பைகளுக்கு மாற்று காகிதப்பைகள் அல்ல.

பால் மற்றும் திரவப்பொருட்கள் வாங்க வேண்டி இருந்தால் பாத்திரங்களை கொண்டு செல்வது நன்று.

உங்கள் இல்ல விழாக்களில் ( பிளாஸ்டிக் ) நெகிழித் தட்டுகளுக்குப் பதிலாக வாழைஇலை அல்லது பாக்குமட்டையில் தயாரான தட்டுகளை உபயோகியுங்கள்.

மாணவர்களாகிய நீங்கள் "நெகிழிப்பொருட்களை எதற்காகவும் உபயோகிக்க மாட்டோம். மற்றவர்கள் உபயோகிப்பதையும் எதிர்ப்போம்" என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மாணவர்கள் :** அப்படியே செய்கிறோம் டீச்சர். மாலை பள்ளி முடிந்ததும் மங்கையர்கரசி மகிழ்வோடு வீட்டிற்குச் சென்றாள். தன் அன்னையிடம் வகுப்பில் நடந்தவைகளைக் கூறினாள். நெகிழிப் பொருட்களால் விளையும் ஆபத்தினை விளக்கமாக கூறினாள். அவள் அன்னை, தையல் இயந்திரத்தில் துணிப்பைகளை தைக்கத் துவங்கினார்.

### உரையாடலாம் வாங்க!



‘துணிப்பை என்பது எளிதானது, தூர எறிந்தால் உரமாவது’ .
‘நெகிழி என்பது பளபளப்பானது, வீசி எறிந்தால் நஞ்சாவது’.



தமக்கு அறிமுகமான செய்திகளையும், விபரங்களையும் சரியான ஒலிப்புடனும் தங்கு தடையின்றியும் படித்தல், விவரித்தல்.

## சிந்தித்து விடை கூறுவோம்

### சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. நெகிழி இச்சொல்லின் பொருள் ....................

(அ) பிசையத்தகும் பொருள் (ஆ) நெகிழும் தன்மையுடைய பொருள்
(இ) மெல்லிய பொருள் (ஈ) கடினமான பொருள்

2. 'பிரார்த்தனை' இச்சொல்லின் பொருள் ....................

(அ) வழிபாடு (ஆ) தூக்கம்
(இ) தியானம் (ஈ) சாப்பிடுதல்

3. 'மட்கிப்போதல்' என்ற சொல்லின் பொருள் ....................

(அ) சிதைந்து மண்ணோடு மண்ணாகிப் போதல்
(ஆ) பெரிதாக வளருதல்
(இ) நிறம் மாறுதல் (ஈ) மறைந்து போதல்

4. 'நஞ்சு' என்ற சொல்லின் பொருள் ....................

(அ) இனிப்பு (ஆ) கசப்பு
(இ) விஷம் (ஈ) மாத்திரை

5. 'மாசடைந்து' என்ற சொல்லின் பொருள் ....................

(அ) அசுத்தம் (ஆ) கலங்கம்
(இ) அழுக்கு (ஈ) கலங்கல்

### பிரித்து எழுதுக

1. ஏற்றுக்கொண்டு =
2. சீரழிக்கும் =
3. துணிப்பை =
4. நோயுற்று =
5. கடைவீதி =

## வினாக்களுக்கு விடையளி

1. பண்டையக்கால மனிதர்கள் பொருட்களை வைக்க, எடுத்துச்செல்ல எவற்றை பயன்படுத்தினார்கள் ?
2. நெகிழியைப் பயன்படுத்துவதால் நிலத்தடி நீர் குறையும் - எவ்வாறு?
3. நெகிழிப் பயன்பாட்டினால் விலங்குகள் எவ்வாறு பாதிப்படைகிறது?
4. நெகிழியை ஒழிக்க மாணவர்களாகிய உங்கள் பங்கு என்ன?

## பொருத்தமான சொல்லை எடுத்து நிரப்புக.

1. மனித குலத்தையே .................. நெகிழிப் பயன்பாடு (சீரழிக்கும் / சீரளிக்கும்)

2. நெகிழியால் ............ கடுமையாக மாசடைகிறது. (நீர்வலங்கள் / நீர்வளங்கள்)

3. சூரியனின் ...........................கதிர்கள் நம்மை நேரடியாக தாக்குகின்றன.

   (புரஊதா / புறஊதா)

4. துணிப்பை, சணல்பை ........................ (எளிதானது / எலிதானது)

5. மங்கை ......................... வீட்டிற்குச் சென்றாள். (மகிள்வோடு / மகிழ்வோடு)

## செயல் திட்டம்

நெகிழி பயன்பாட்டின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் எழுதி பதாகைகளை உருவாக்குங்கள்.

காகிதப்பை செய்து பழகுங்கள்.

## இணைந்து செய்வோம்







## சொற்களை இனம்கண்டு அதற்குரிய பெட்டிக்குக் கீழே எழுதுக.

1. அழுகிய காய்கள் பழங்கள் 2. காய்ந்த இலை தழைகள்

3. உடைந்த கண்ணாடி 4. பென்சில் துருவல்கள்

5. மஞ்சள்பை / துணிப்பை 6. காலி குளிர்பான பாட்டில்கள்




1. ____________________
2. ____________________
3. ____________________




1. ____________________
2. ____________________
3. ____________________

# ஒருமை பன்மை அறிவோமா?

ஒரு பொருளை மட்டும் குறிப்பது **ஒருமை**.
ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது **பன்மை**.

| ஒருமை | | பன்மை |
|---|---|---|
| புத்தகம் | - | புத்தகங்கள் |
| கை | - | கைகள் |
| மனிதர் | - | மனிதர்கள் |

ஒருமைச் சொல்லுக்கு உரிய பன்மைச் சொல்லை எழுதுவோம்



கண் ..........................
யானை ..........................
செடி ..........................
காய் ..........................





முத்து ..........................
திருவிழா ..........................
பசு ..........................
தேனீ ..........................



பழம் ..........................
மேகம் ..........................
குளம் ..........................
சிங்கம் ..........................



கல் ..........................
பல் ..........................
சொல் ..........................
புல் ..........................



முள் ..........................
ஆள் ..........................
பொருள் ..........................
தாள் ..........................



யானைகளைப் பயிற்சி செய்யும் இடத்தை சுற்றிப் பார்க்க வழிப்போக்கர் ஒருவர் வந்திருந்தார். அந்த இடத்தைப் பார்த்தவருக்கு ஒரே வியப்பு.

அங்கே பெரிய பெரிய யானைகளை, அவைகளின் முன்னங் கால்களில் ஒன்றில் மட்டும் சிறு கயிற்றைக் கொண்டு கட்டிப் போட்டிருந்தனர். சங்கிலிகள், கூண்டுகள் ஊ ஹூம்ம்ம் எதுவுமில்லை.

அந்த யானைகள் எப்போது வேண்டுமானாலும் அந்தச் சிறுகயிற்றை அறுத்துக் கொண்டு போய் விடலாம். ஆனால், அவைகள் அவ்வாறு செய்யவில்லை. ஏன்? மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எந்த ஒரு யானையும் அப்படிச் செல்ல முயல்வதாகவே தெரியவில்லை.

கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள் / ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துதல்

அப்போது அந்தப் பக்கம் ஒரு பயிற்சியாளர் நடந்து சென்றார். வழிப்போக்கர் அவரை அணுகி, 'ஐயா! இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது. இந்தச் சிறு கயிற்றைக் கொண்டு இவ்வளவு பெரிய மிருகத்தை எவ்வாறு கட்டிப் போட்டிருக்கிறீர்கள். விந்தையிலும் விந்தையாக இருக்கிறது' என்று வினவினார்.

'ஓ! அதுவா. இந்த யானைங்க சிறுகுட்டியாக இருக்கும் பொழுதே இந்த சின்னக்கயிற்றால் கட்டிப் போடுவோம். அந்தச் சமயம் அதுங்க அளவிற்கு அதுவே போதும் .... அப்போது ஓட முயன்றாலும் அதால இந்தக் கயிற்றை அசைக்க முடியாது.

இந்தக் கயிற்றை நம்மால அறுக்க முடியாது என்று அதுங்க மனசுல பதிஞ்சு போயிடும். அதன் பிறகு வருடம் போகப் போக அவைகள் பெரிதானாலும் அதையே உண்மையென்று நினைத்துக் கொண்டு கயிற்றை அறுக்க எந்த ஒரு முயற்சியும் செய்வதில்லை' என்று பயிற்சியாளர் கூறினார்.

அதைக் கேட்ட வழிப்போக்கர், மிகவும் அதிசயப்பட்டார். இந்த யானைகளுக்கு பெரும்பலம் இருந்தும், சின்னதாக அசைந்தாலே அந்தக் கயிறு அறுபட்டு விடும். ஆனாலும், அவைகளின் மனதினுள்ளே முடியாது என்ற அவநம்பிக்கை இருக்கவே அதற்கான எந்த ஒரு முயற்சியும் செய்யாமல் இருக்கின்றன என்பதை அறிந்தார்.

இந்த யானைகளை போல நம்மில் பலரும் ஒரு முறை முயற்சி செய்து தோற்றுப்போனதால் நம்மால் அதை செய்ய இயலாது என நினைத்துக் கொள்கிறோம்.

உண்மையில் தோல்வி என்பது நமக்கு ஏற்படும் பாடம். தோற்றுப் போக பயந்தால் வெற்றியும் நம்மை தேடி வராது.

தோல்விகளில் இருந்து பாடங்களை கற்றுக்கொண்டு, நம் வாழ்க்கையை தொடர்ந்து போய் கொண்டே இருக்க வேண்டியது தான்.

**உரையாடலாம் வாங்க!**

முயற்சி திருவினையாக்கும் என்ற கதையைப் போன்று மற்றொரு கதைக் கூறுக.



முயற்சி திருவினையாக்கும் என்ற கதையில் நாம் அறிந்து கொண்ட பாடம் என்ன ? உனது கருத்து என்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக.

## சிந்தித்து விடையளி

### அ ) சரியான விடையைத் தேர்வு செய்க.

1. **வியப்பு** என்ற சொல்லின் பொருளைக் கண்டுபிடி

   (அ) ஆச்சர்யம் (ஆ) கோபம்

   (இ) மகிழ்ச்சி (ஈ) அழுகை

2. **வழிப்போக்கன்** - இச்சொல்லைப் சேர்த்து எழுதக் கிடைப்பது.

   (அ) வழி + போக்கர் (ஆ) வழிப் + போக்கர்

   (இ) வழிப்போ + க்கர் (ஈ) வ + போக்கர்

3. **உண்மை** என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..................

   (அ) வாய்மை (ஆ) பொய்மை

   (இ) கடமை (ஈ) பொறுமை

4. **சின்னக்கயிறு** - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

   (அ) சி + கயிறு (ஆ) சின்ன + கயிறு

   (இ) சின்னக் + கயிறு (ஈ) சிறிய + கயிறு

5. "**அவநம்பிக்கை**" என்ற சொல்லின் பொருள் ...........

   (அ) அதிக நம்பிக்கை (ஆ) அதிசயம்

   (இ) நம்பிக்கை (ஈ) நம்பிக்கையின்மை

### ஆ ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தோற்றுப் போக பயந்தால் ........................... நம்மை தேடி வராது.

### இ ) கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி

1. தோல்வியால் நமக்கு ஏற்படுவது என்ன?
2. யானை ஏன் கயிற்றை அறுத்துக்கொண்டு போகவில்லை?
3. வழிப்போக்கர் ஏன் வியப்படைந்தார்?
4. எதனைக் கண்டு நாம் அஞ்சக் கூடாது?
5. இக்கதையின் மூலம் நீ கற்றுக்கொண்டது என்ன?

ஒவ்வொரு உயிரினங்களுக்கும் தனித்திறமையானது உண்டு. அதனை தக்க சமயத்தில் வெளிப்படுத்தினால் தான் வாய்ப்புகளை பெற முடியும்.

## வினாக்களுக்கு விடையளி

1. கருப்பு நிறமுடையவன். கபடம் அதிகம் கொண்டவன். கூவி அழைத்தால் வந்திடுவான். கூட்டம் சேர்த்தும் வந்திடுவான் - அவன் யார்?
2. தலைபோனால் மறைக்கும். இடை போனால் குரைக்கும். கால் போனால் குதிக்கும். மூன்றும் ஒன்று சேர்ந்தால் முந்தி ஓட்டம் பிடிக்கும் - அது என்ன?

**விடைகள் :** ŕமழ்ஞெ ‘ஏஞபஞ

### பாடப் பொருளை வரிசைப்படுத்துவோமா?

1. வழிப்போக்கர் மிகவும் அதிசயப்பட்டார்.
2. யானைகள் கயிரை அறுக்க எந்த முயற்சியும் செய்யவில்லை.
3. யானைகள் சிறுகுட்டியாக இருக்கும் பொழுதே சின்னக்கயிற்றால் கட்டுவோம்.
4. சுற்றிப் பார்க்க வழிப்போக்கர் ஒருவர் வந்தார்.

### பழத்திற்குள் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கலாமா?




எ.கா:

1. ஆசிரியர்
2. ---------------------------
3. ---------------------------
4. ---------------------------
5. ---------------------------
6. ---------------------------
7. ---------------------------
8. ---------------------------
9. ---------------------------
10. ---------------------------

பொருத்தமான எதிர்ச்சொல்லை சரியான பந்தைக் கொண்டு மட்டையுடன் இணைக்கவும்.










------------------------------ ------------------------------ ------------------------------

எளிதாக 

முடியும் 

பலர் 

உண்மை 

சேர்ந்தனர் 




கடினமாக



------------------------------ ------------------------------

## இணைந்து செய்வோம்

மாணவர்களுக்கு வேண்டிய குணங்களைக் கொண்ட மான்களுக்கு மட்டும் வண்ணமிடுக



## தமிழோடு விளையாடு



கரும்பலகையில் ஆசிரியர் மொழி முதல் எழுத்துகளை எழுதிக் கொள்ள வேண்டும். மாணவர்கள் அனைவரையும் கரும்பலகையின் முன் அமரச்செய்ய வேண்டும். ஒரு சிறிய பந்தினை மாணவர்களிடம் யாராவது ஒருவர் கையில் கொடுத்து கரும்பலகையில் ஆங்காங்கே உள்ள எழுத்துகளின் மேல் எறியச் செய்ய வேண்டும். எந்த எழுத்தின் மேல் பந்து படுகிறதோ அந்த எழுத்தைக் கொண்டு ஒரு வார்த்தை அந்த மாணவர் கூற வேண்டும். இவ்வாறே அனைத்து மாணவர்களையும் பங்கேற்க செய்ய வேண்டும். எல்லா எழுத்து களையும் பயன்படுத்திவிட வேண்டும்.

## கலையும் கைவண்ணமும்

பயன்படுத்திய மற்றும்
உபயோகமற்ற
பொருள்களைக் கொண்டு
பல்வேறு உருவங்கள்
செய்து மகிழ்க.



எ.கா. உதிர்ந்த இலைகளைக் கொண்டு உருவம் அமைத்தல்

## செயல் திட்டம்

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது போன்று தன்னம்பிக்கையை வளர்க்கும் ஏதேனும் ஐந்து பொன்மொழிகள் மற்றும் பழமொழிகளை எழுதித் தொகுத்து வருக.

## இனியவை நாற்பது



கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது

- பூதஞ்சேந்தனார்

### பாடல் பொருள் :

படித்த அறிஞர்களிடம் நாம் கற்ற கல்வியைப் பற்றி கூறுதல் நமக்கு மகிழ்ச்சியைத் தரும். அதே போல் கல்வியில் சிறந்து விளங்கியவர்களோடு நாம் இருப்பது நமக்கு இனிமையை தரும். நாம் யாரிடமும் எதையும் கேட்டு வாங்காமல் நம்மால், முடிந்தவற்றை அடுத்தவர்களுக்கு கொடுத்து உதவுவது நமக்கு மகிழ்ச்சியைத் தரும்.

### பொருள் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| மிக்கவர் | : அறிவில் மேம்பட்டவர் | எத்துணையும் | : எல்லாவற்றிலும் |
| எள்துணை | : எள் அளவு | மாண்பு | : பெருமை |

### நூலைப்பற்றி:

இந்நூல் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனாரால் எழுதப்பட்டது. வாழ்க்கைக்கு நன்மைதரும் இனிய கருத்துகளைக் கூறுவது. நாற்பது பாடல்களைக் கொண்டது. எனவே இனியவை நாற்பது என்று அழைக்கப்படுகிறது.

**செய்யுளைத் தெளிவான உச்சரிப்புடன் படித்தல், அதன் சரியான பொருளைப் புரிந்து கொண்டு கருத்தை வெளிப்படுத்துதல்.**

## உரையாடலாம் வாங்க!

பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்துக்காட்டுக.

கற்றவர்க்கும் கல்லாதவர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.



உன் நண்பனின் தேவை அறிந்து அவன் கேட்கமாலேயே உதவிய அனுபவம் உனக்கு உண்டா? அதில் உனக்கு மகிழ்ச்சியா? வருத்தமா? ஏன்? கலந்துரையாடு....

## சிந்தித்து விடை கூறுவோம்

### சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. உரைத்தல் என்ற சொல்லின் பொருள் ..................................................

(அ) பாடுதல் (ஆ) வரைதல்

(இ) சொல்லுதல் (ஈ) எழுதுதல்

2. ஈதல் என்ற சொல் குறிக்கும் பொருள் ..................................................

(அ) கொடுத்தல் (ஆ) எடுத்தல்

(இ) தடுத்தல் (ஈ) வாங்குதல்

3. மிக்காரை என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..................................................

(அ) அறிவிலாதார் (ஆ) அறிந்தோரை

(இ) கற்றோரை (ஈ) அறிவில் மேம்பட்டவர்

4. இரவாது என்ற சொல் குறிக்கும் பொருள் ..................................................

(அ) பிறரிடம் கேட்டுப் பெறாது (ஆ) பிறரிடம் கேட்டுப் பெறுவது

(இ) பிறரிடம் கொடுப்பது (ஈ) பிறருக்கு கொடுக்காது

5. சேர்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ..................................................

(அ) தேடுதல் (ஆ) பிரிதல்

(இ) இணைதல் (ஈ) களைதல்

## பொருள்பட எழுதிப் படித்து மகிழ்க

1. அ றம் செய் துபழகு

_______________ _______________ _______________

2. என துதாய்மொ ழிதமிழ்

_______________ _______________ _______________

3. மழைநீ ர்உயிர் நீர்

_______________ _______________ _______________

4. பெரி யோரை மதித் துவா ழ்

_______________ _______________ _______________

5. கற்றப டிந டந்து கொ ள்

_______________ _______________ _______________

## நீ எதை விரும்புவாய்? ஏன்? கலந்துரையாடுக





## தெரிந்து கொள்வோம்

- உன் நண்பனை உனக்குப் பிடிக்கக் காரணங்கள் எவை?
- உன்னிடத்தில் உனக்குப் பிடிக்காதது எது?
- வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.

## *சிந்திக்கலாமா?*

கதிரும் பாபுவும் சகோதரர்கள், இருவரும் உண்டியலில் பணம் சேமித்து வருகின்றனர். அந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ள பாதிப்பினை அறிந்த கதிர் வெள்ள நிவாரண நிதிக்காக, தான் உண்டியலில் சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொடுக்க நினைக்கிறான். அவனின் தம்பி பாபுவோ, தனது உண்டியலில் சேர்ந்த பணத்தில் இருந்து பிடித்தமான திறன்பேசியை வாங்க நினைக்கிறான்.

இவர்கள் இருவரில் நீ யாராக இருக்க விரும்புகிறாய்? அதற்குரிய காரணங்களைக் கூறு.

## செயல் திட்டம்

கல்வி என்ற அதிகாரத்தில் இருந்து எவையேனும் ஐந்து திருக்குறள்களைப் படித்து, எழுதி வருக.

# நூலகம்




அன்று விடுமுறைதினம். மஞ்சுளா, பூங்காவிற்கு சென்று ஊஞ்சல், இராட்டினம் எல்லாம் விளையாட ஆசைப்பட்டாள். அம்மாவிடம், தன் விருப்பத்தைச் சொன்னாள். நீங்கள் என்னுடன் இன்று அவசியம் பூங்காவிற்கு வர வேண்டும். எவ்வளவு நாட்களானது? நாம் பூங்கா சென்று? என்று வற்புறுத்தினாள். எனக்கு வீட்டுவேலைகள் நிறைய இருப்பதால் ஊரிலிருந்து வந்திருக்கும் உன் மாமாவை அழைத்துச் செல் என்று அவளது அம்மா கூறினாள்.

சென்னையிலிருந்து வந்திருந்த மஞ்சுளாவின் மாமா ஆசீர்வாதம் அவளுடைய அழைப்பை ஏற்றார். ஆனால் ஒரு வேண்டுகோள். இன்று "நூலகதினம்" ஆனதால் அருகிலுள்ள நூலகம் சென்று விட்டு பூங்காவிற்குச் செல்லலாம் என்றார். மஞ்சுளாவிற்குப் பூங்கா சென்று விளையாடவே விருப்பம் அதிகம். அவனுடைய மாமா விரும்பியதால் சரி, நூலகத்தை விரைவில் பார்த்து விட்டு பூங்காவிற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்றாள். வீட்டிற்கு அருகில் வந்த சிற்றுந்தில் ஏறி நூலகம் சென்றனர்.

கேட்கும் செய்திகளைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துதல்




அன்றைய தினம் நூலகதினமாதலால் நூலகத்தைத் தோரணம் கட்டி, அழகுப்படுத்தியிருந்தார்கள். வர்ணம் பூசி, கட்டிடம் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. கிளைநூலகம் என்ற எழுத்துகள் மின்விளக்கு களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்த மஞ்சுளா, நூலகம் என்றால் என்ன? என்று மாமாவைக் கேட்டாள்.

ஆசீர்வாதம் : நூல் + அகம் = நூலகம். நூல் என்றால் புத்தகம் என்பது பொருள். பல்வேறு துறை சார்ந்த புத்தகங்கள் சேமிக்கப் பட்டு வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அந்த இடமே நூலகம் ஆகும். நூல் நிலையம் "வாசகசாலை" என்றும் அது அழைக்கப்படுகிறது.

நூல்களைத் தவிர பிற ஊடகங்களும், இங்கே வைக்கப் பட்டிருக்கும். பல நூலகங்கள் இன்று நுண்படலம், நுண் சுருள்தகடு, ஒலிப்பேழைகள், குறுவட்டுகள் போன்றவற்றையும் சேமித்து வைக்கும் இடங்களாகவும் இருக்கின்றன.

மஞ்சுளா : என்னிடம் தான் நிறையப் பாடப்புத்தகங்கள் இருக்கின்றனவே. நான் ஏன் இவற்றையெல்லாம் படிக்க வேண்டும்?

**ஆசீர்வாதம்** : சிரித்துக்கொண்டே.... நூலகத்தில் நாம் பெறும் பயன்கள் பலப்பல...

1. பள்ளி மாணவர்கள் தம் பாடநூலில் கற்றவை தொடர்பான பிற செய்திகளை அறிந்து கொள்ளலாம்.

2. தகவல்மையம் என்று போற்றப்படும் நூலகம் வாயிலாக பல்வேறு தகவல்களையும் ஒரே இடத்தில் வாசித்து பன்முக அறிவு பெறலாம்.

3. நூலகப் படிப்பால் மாணவர்கள் அறிவு, ஆற்றல், பண்பாடு சிறக்கும். நல்ல நல்ல நூல்களைத் தேடிப் படிப்பதால் தன்னம்பிக்கையும், மூளைக்கும் புத்துணர்ச்சியும் ஏற்படும்.

4. நம்முடைய வாசிக்கும் திறன் மேம்படும். இந்த நூலகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டால் விரும்பும் புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் சென்றும் வாசிக்கலாம் என்று கூறிக்கொண்டே மாமா மஞ்சுளாவை நூலகத்திற்குள் அழைத்துச் சென்றார்.

**மஞ்சுளா** : அடே அப்பா! மாமா இங்கு எத்தனை வகையான நூல்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன?.அவை பற்றி விளக்கமாகக் கூறுங்கள்.

**ஆசீர்வாதம்** : இங்கே பல பிரிவுகளாகப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இங்கே குழந்தைகளுக்கான தனிப்பிரிவு உள்ளது. அதில் சிறுவர்களுக்கான புத்தகங்கள், காமிக்ஸ் என்றழைக்கப்படும் சித்திரப் புத்தகங்கள், வண்ண வண்ண ஓவியப்புத்தகங்கள் என ஏராளமாக இருந்தன. மஞ்சுளா ஓடி ஓடிச்சென்று ஒவ்வொரு புத்தகமாகப் பார்த்தாள். அவளுக்கு ஆர்வம் அதிகரித்தது.

மாமா ஒவ்வொரு பிரிவில் உள்ள நூல்களையும், மஞ்சுளாவிற்கு அறிமுகப்படுத்தினார். நன்னெறிக் கதைகள், கவிதைகள், தமிழ், ஆங்கிலம் மற்றும் பிறமொழி இலக்கியநூல்களைக் காண்பித்தார். அறிவியல் நூல்கள், வரலாற்று நூல்கள், ஆன்மிகவாதிகள், அறிவியல்அறிஞர்கள், சமுதாய சீர்த்திருத்தவாதிகளின் வாழ்க்கை வரலாறு கூறும் நூல்கள் என எல்லாவற்றையும் காண்பித்து விளக்கிக் கூறினார்.

இவை மட்டுமின்றி அனைத்து வகையான நாளிதழ்கள், வாரஇதழ்கள், மாத இதழ்கள், சிறுவர் மலர்கள், வேலைவாய்ப்புச்செய்திகள் பற்றிய இதழ்கள் பற்றியும் கூறினார். ஒவ்வொன்றையும் பார்க்க மஞ்சுளாவிற்கு எல்லாவற்றையும் வாசிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது.

சரி வா! மஞ்சுளா பூங்காவிற்குச் செல்வோம். நேரமாகிவிட்டது.

மஞ்சுளா : பூங்காவிற்குப் போக வேண்டாம் மாமா! இங்கேயே இருப்போம். இன்னும் நிறைய புத்தகங்களைப் பார்ப்போம், படிப்போம், தெளிவோம் என்றாள்.

## தெரிந்து கொள்வோம்

- மண்புழுக்கள் மண்ணை வளமாக்கும்.
- புத்தகப் புழுக்கள் தம் மனதை வளமாக்கும்
- என்னைத் தேடி நீ வந்தால்
  உன்னைத் தேடி உலகம் வரும்
  - நூலகம்.
- நூலகத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்
  - திரு. அரங்கநாதன்

## உரையாடலாம் வாங்க!

உன் பள்ளி நூலகத்தில் உள்ள நூல்களுள் நீ படித்த ஏதேனும் ஒரு நூல் / கதை பற்றி வகுப்பறையில் கலந்துரையாடு.



அருகில் உள்ள நூலகத்திற்குச் சென்று வந்த அனுபவத்தைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடு.

## சரியான விடையைத் தேர்வு செய்வோமா?

1. 'நூலகம்' என்ற சொல்லின் பொருள் ..........................................................
   (அ) கட்டிடம் (ஆ) விளக்கு
   (இ) ஒட்டகம் (ஈ) புத்தகம்

2. 'பன்முகஅறிவு' என்ற சொல்லின் பொருள் ..................................................
   (அ) பல துறைகளைப் பற்றிய ஆய்வு (ஆ) கவிதை எழுதுபவர்
   (இ) பல மனிதர்களுடன் படித்தல்
   (ஈ) நிறைய மாணவர்கள் படித்தல்

3. 'நன்னெறி' - பொருள் கூறுக.
   (அ) நல்ல பண்பு (ஆ) நன்மை செய்பவர்
   (இ) சிறுவர் (ஈ) வயதானவர்கள்

4. சித்திரப்புத்தகங்கள் - பிரித்து எழுதுக.
   (அ) சித்தி + புத்தகங்கள் (ஆ) சித்திரம் + புத்தகங்கள்
   (இ) சிந்தனை + புத்தகங்கள்

5. தகவல் + மையம் - சேர்த்து எழுதுக.
   (அ) தகவல்மையம் (ஆ) தகவமையம்
   (இ) தகவள்மையம் (ஈ) தபால்மையம்

## வினாக்களுக்கு விடையளி

1. நூலகத்தின் பயன்கள் யாவை?
2. நூலகத்தில் எந்தெந்த பிரிவு பற்றிய நூல்கள் இருந்தன ?
3. நூலகத்தில் குழந்தைகளுக்கான சிறப்பம்சங்கள் என்னென்ன?
4. உனது ஊரில் உள்ள நூலகம் பற்றி எழுதுக.
5. நூலகத்தின் வேறு பெயர்கள் யாவை?

## எழுத்துகளை முறைப்படுத்தி சொல் உருவாக்குக

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பு | த் | ங் | ள் | க | த | க |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ர் | வ | று | ள் | க | சி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

| | | | |
|---|---|---|---|
| ன் | றி | னெ | ந |

| | | | |
|---|---|---|---|
| | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மை | ம் | த | க | ல் | வ | ய |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| தை | க | வி | ள் | க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

## நிறுத்தக் குறியீடுகளின் பெயர்களை அறிவோமா?

1. காற்புள்ளி (,)
2. அரைப்புள்ளி (;)
3. முக்காற்புள்ளி (:)
4. முற்றுப்புள்ளி (.)
5. வினாக்குறி (?)
6. வியப்புக்குறி (!)
7. ஒற்றை மேற்கோள் குறி (’)
8. இரட்டைமேற்கோள் குறி (”)
9. அடைப்புக்குறி ( ( ) )
10. மாற்றுக்குறி ( / )
11. இணைக்குறி ( - )

வாசிக்க : ( மேற்கண்ட நிறுத்தற்குறிகளை கோடிடுக )

"வீட்டிற்கு வெளிச்சம் தருவது சாளரம் ; புத்தகங்கள் இல்லாத வீடு, சாளரங்க் இல்லாத வீடு போலாகும்". நம்மை ஏமாற்றாத, ஒரு சிறந்த நண்பன் புத்தகம் தான். நல்ல புத்தகங்களைப் படிப்பதால் அறிவு வளரும் ; உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும் ; நல்லெண்ணம் உண்டாகும் ; திறமைகள் மிளரும் ; உற்சாகம் ஊற்றெடுக்கும் ; சோர்வு அகலும் ; வாழ்க்கை மேம்படும் ; முன்னேற வழி கிடைக்கும் ; எனவே நூல்களை வாசிப்போம்.

## பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:

புவனாவும், கலாவும் தோழிகள். பள்ளி முடிந்து வீட்டிற்கு பேசிக் கொண்டே நடந்து சென்றனர். அப்போது சிறுவர்கள் ஒரு டப்பாவில் பொன்வண்டு பிடித்து அடைத்து வைத்துக் கொண்டிருந்தனர். புவனா எதற்காக அவைகளைப் பிடிக்கிறீர்கள்? பாவம் அடைத்து வைக்க வேண்டாம். உங்களையெல்லாம் ஒரு இருட்டறையில் பூட்டினால் என்ன செய்வீர்கள்? பாவம் அல்லவா! பொன்வண்டினை விட்டு விடுங்கள் உயிர்களை துன்புறுத்தக் கூடாது என்றாள். உடனே சிறுவர்கள் யோசித்துப் பார்த்து டப்பாவை திறந்து பொன்வண்டை பறக்க விட்டனர். இனி அவ்வாறு செய்ய மாட்டோம் என்றும் கூறினர்.

1. கலாவின் தோழி யார்?
2. புவனாவும் கலாவும் எங்கிருந்து வீட்டிற்கு சென்றனர்?
3. சிறுவர்கள் பொன்வண்டை எதற்காக பிடித்தனர்?
4. உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது என்று கூறியது யார்?

## பொருத்தமான சொல்லால் நிரப்புக.

1.  இன்றி .................. வராது.

2.  இல்லாமல் ........... முடியாது.

3.  இன்றி ............. வளராது.

| |
|---|
| தாமரை |
| மழை |
| பார்க்க |

## செயல் திட்டம்

அருகில் உள்ள நூலகத்திற்குச் சென்று உனக்கு விருப்பமான சிறுவர் இதழ்களைப் படித்து அதில் உனக்குப் பிடித்த இரண்டினை எழுதி வரவும்.

# 9 மாட்டு வண்டியிலே .....

‘சலங்கை குலுங்கும் கொம்புகள ஆட்டிக்கிட்டு
திமிலைத் தானே உயர்த்திக்கிட்டு வெள்ளை உள்ளம் கொண்ட
காளைகள் வருகுது பாரு.
வாய்க்கா வரப்புகள சுத்திப் பார்க்க கிளம்புங்க ஜோரு
ஹேய் .... ஹேய் .... ( தாத்தா பாட )
ஜல் ஜல் .... காளைகள் தலையை ஆட்ட’
வீட்டுக்குள்ளே இருந்து ஓடி வந்த ‘கதிரவனும், வெண்ணிலாவும்’
என்ன தாத்தா? ஒரே சந்தோஷமா இருக்கீங்க’?

தாத்தா : தங்கங்களா! கிழக்கு வெளுத்திருச்சு! உச்சி வெயில் மண்டைய தாக்கும் முன்ன சிலுசிலுன்னு காத்துல மாட்டுவண்டியில வயல்வரப்புகள் எல்லாம் சுத்திப்பார்க்கலாம். கிளம்புங்க! கிளம்புங்க!

( வெண்ணிலாவும், கதிரவனும் நகரத்து வாழ்க்கை அலுப்புத்தட்ட தாத்தாவின் கிராமத்திற்கு வந்திருந்தனர். கிராமத்தைச் சுற்றிப் பார்க்க ஆவல் கொண்டனர். )



வெண்ணிலா : இதோ வந்துட்டோம் தாத்தா! ஏய் கதிரவா! வா! கையப் பிடிச்சுக்கோ!

( இருவரும் மாட்டுவண்டியில் அமர தாத்தா வண்டியை ஓட்டுகிறார் )

கதிரவன் : ஆஹா! என்ன வாசனையா காத்து ஆடிக்குது! எங்கப்பார்த்தாலும் பச்சைப்போர்வைய போர்த்திக் கொண்ட வயல்வெளிகளைப் பார்த்துக்கிட்டு போயிட்டே இருக்கலாம் தாத்தா.
எங்க ஊர்ல வயல்வெளிகளே இல்லை தாத்தா!

வெண்ணிலா : என்ன தாத்தா! பேசாம வண்டிய ஓட்டிக்கிட்டு இருக்கீங்க? ஏதாவது ஒரு புதிர் போடுங்க.

தாத்தா : சரி போடுறேன்! பதில் சொல்லுங்க பாக்கலாம். ‘படுத்து தூங்கினால் கண் முன் ஆடும். அடுத்து விழித்தால் மறைந்தே ஓடும்’. அது என்ன?

கதிரவன் : ஆடும், ஓடும். என்ன சொல்றீங்க தாத்தா? ஒண்ணுமே புரியலையே.

வெண்ணிலா : நான் சொல்றேன். கனவு. சரியா தாத்தா!

தாத்தா : நல்லது. அரசன் ஆளாதக் கோட்டைக்குப் பகல் காவல்காரன் ஒருவன். இரவுக் காவல்காரன் ஒருவன். அவன் யார்?

கதிரவன் : அரசனே ஆளல.
அப்புறம் எப்படித் தாத்தா காவல்காரன்?

வெண்ணிலா : சூரியன் - சந்திரன். சரியா தாத்தா.

தாத்தா : சபாஷ். கதிரவா இது உனக்கு மிகவும் எளிமையாக இருக்கும். கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?

கதிரவன் : கண்டுபிடிச்சுட்டேன். கரும்புதானே.

வெண்ணிலா : இப்ப நாங்க கேட்கிறோம்.
நீங்க சொல்லுங்க பார்க்கலாம்.
ஏரியில் இல்லாத நீர் ; தாகத்திற்கு உதவாத நீர். ஆனால் தண்ணீர் அல்ல. சொல்லுங்க பாக்கலாம். அது என்ன?



தாத்தா : என்னை விட புத்திசாலிகளா இருக்கீங்களே? இருந்தாலும் சொல்றேன். கண்ணீர் தானே!

கதிரவன் : எப்படி தாத்தா! சரியா சொல்லிட்டீங்க! தொட்டுப் பாக்கலாம். எட்டிப் பாக்க முடியாது. அது என்ன?

தாத்தா : முதுகு. சரியா?

வெண்ணிலா : நல்லது தாத்தா! இப்ப நான் கேட்கிறேன் காற்றைக் குடித்து காற்றில் பறப்பான். அவன் யார்?

தாத்தா : அதுவா? கதிரவனுக்கு ரொம்ப பிடிச்சது. என்ன தெரியுமா? பலூன்

இருவரும் : எங்க தாத்தான்னா தாத்தா தான். இருவரும் சிரித்தனர்.

( வயல்வரப்புகளை சுற்றிப் பார்த்த மகிழ்ச்சியிலும், நகரத்தில் கிடைக்காத இலந்தைப்பழம், நுங்கு, இளநீர், சோளம், வேர்க்கடலை போன்றவற்றை எல்லாம் சுவைத்து சாப்பிட்ட களிப்பிலும் வீடு வந்து சேர்ந்தனர். )

## உரையாடலாம் வாங்க!



மாட்டு வண்டியைப் பார்த்திருக்கிறாயா? பயணம் செய்ததுண்டா? அப்படி நீ சென்று வந்த அனுபவம் குறித்து உன் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தண்ணீர் இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது ..............................

(அ) தண்+ணீர் (ஆ) தண்+நீர்

(இ) தண்மை+நீர் (ஈ) தன்+நீர்

2. மேலே இச்சொல்லின் எதிர்ச்சொல் ..................................................

(அ) உயரே (ஆ) நடுவே

(இ) கீழே (ஈ) உச்சியிலே

3. வயல் + வரப்பு -இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .................

(அ) வயவரப்பு (ஆ) வயள்வரப்பு

(இ) வரப்பு (ஈ) வயல்வரப்பு

4. இலந்தை + பழம்-இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .............

(அ) இலந்தப்பழம் (ஆ) இலந்தம்பழம்

(இ) இலந்தைபழம் (ஈ) இலந்தைப்பழம்

5. வெயில் இச்சொல்லின் எதிர்ச் சொல் ..............................................

(அ) நிழல் (ஆ) பகல்

(இ) வெப்பம் (ஈ) இருள்

## இணைக்கலாமா?



















## சொல் கோபுரம் அமைப்போம்

1. 'போ' என்பதன் எதிர்ச்சொல். (1)
2. இதன் இலையில் விருந்து சாப்பிடலாம். (2)
3. காலாலே நீர் குடித்து தலை யாலே தண்ணீர் தரும்.(3)
4. தாகத்தை தீர்க்கும். (4)
5. முக்கனிகளுள் ஒன்று. (5)

## பொருத்தமான படங்களை மரத்திலிருந்து பறித்துப் பொருத்தலாமா!



1. உருவம் இல்லாதவன் ஆனால் சொன்னதை திரும்பச் சொல்வான். அவன் யார்?.........................
2. எட்டுக் கைகள் விரிந்தால் தெரியும். அது என்ன?.....................................
3. ஒரே ஒரு பூ பூக்கும். ஆனால் குலை குலையாய் காய் காய்க்கும். அது என்ன?....................................
4. ஒற்றை காது உடையவன். ஓடி ஓடி இணைப்பான். அவன் யார்?..............
5. அன்றாடம் மலரும் அனைவரையும் கவரும் அது என்ன?..........................
6. என்னோடு இருக்கும் சிறுமணி, எனக்குத் தெரியாது ஆனால் உனக்குத் தெரியும் அது என்ன?.................................
7. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது. அது என்ன?.............
8. ஒளி கொடுக்கும் விளக்கல்ல, வெப்பம் தரும் நெருப்பல்ல, பளபளக்கும் தங்கம் அல்ல அது என்ன?...............................

## தமிழோடு விளையாடு



புதிர்களையும் விடைகளையும் எழுதிய அட்டைகளை வகுப்பறையின் நடுவில் வைக்க வேண்டும். மாணவர்களை அழைத்து ஒவ்வொரு மாணவனையும் ஓர் அட்டையை எடுக்கச் சொல்ல வேண்டும். புதிர் அட்டையை வைத்திருக்கும் மாணவனோடு அப்புதிருக்கான விடையை வைத்திருக்கும் மாணவன் இணைந்து நிற்க வேண்டும்.

அவர்கள் இருவரும் அதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும். இருவரும் இச்செயலைச் செய்து முடிக்கும் கால அளவை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த இருவர் இவ்விளையாட்டை விளையாடுவர். எவர் இருவர் குறைவான கால அளவில் இணை சேர்ந்தனரோ அவர்களே வெற்றி பெற்றவராவர். அனைத்து மாணவர்களையும் விளையாட்டில் பங்கு பெறச் செய்ய வேண்டும்.

## செயல் திட்டம்

வீட்டில் உள்ள தாத்தா பாட்டியிடம்
மூன்று புதிர்களைக் கேட்டறிந்து குறிப்பேட்டில் எழுதி வருக.

# அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிஞர் | - | அறிவில் சிறந்தவர் |
| 2. | ஆன்றோர் | - | பெரியோர் |
| 3. | இரவாது | - | பிறரிடம் கேட்டுப் பெறாது |
| 4. | ஈதல் | - | கொடுத்தல் |
| 5. | உரைத்தல் | - | சொல்லுதல் |
| 6. | ஒலி | - | சத்தம் |
| 7. | ஒளி | - | வெளிச்சம் |
| 8. | கதிரவன் | - | சூரியன் |
| 9. | களிப்பு | - | மகிழ்ச்சி |
| 10. | காலை | - | சூரியன் உதிக்கும் நேரம் |
| 11. | காளை | - | எருது |
| 12. | கூட்டம் | - | கும்பல் |
| 13. | சேகரித்தல் | - | ஒன்று திரட்டுதல் |
| 14. | சேர்த்தல் | - | இணைத்தல் |
| 15. | தகுதி | - | தரம் |
| 16. | தெளிவாக | - | விளக்கமாக |
| 17. | நித்திலம் | - | முத்து |
| 18. | நூல் | - | புத்தகம் |
| 19. | நேர்மை | - | உண்மை |
| 20. | பகைவர்கள் | - | எதிரிகள் |
| 21. | பணி | - | வேலை |
| 22. | பல்லி | - | ஒரு சிறிய உயிரி |
| 23. | பள்ளி | - | கல்வி கற்கும் இடம் |
| 24. | மிக்காரை | - | உயர்ந்தோரை |
| 25. | முயற்சி | - | ஊக்கம் |

| திறன் பகுதி | திறன் | பாட எண் |
|---|---|---|

## கேட்டல்

| | | |
|---|---|---|
| 1. | எளிய சந்தப்பாடல்களைக் கவனத்துடன் கேட்டுப் புரிந்து கொள்ளுதல், கருத்தினை வெளிப்படுத்துதல். | 1, 4 |
| 2. | தம்மைச் சுற்றி நடைபெறும் உரையாடல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | 2, 5 |
| 3. | வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு, விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல். | 9 |

## பேசுதல்

| | | |
|---|---|---|
| 1. | அறிந்த கேட்ட கதைகள், தகவல்களைத் தொடரில் பேசுதல் | 3 |
| 2. | பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுதல் | 1, 4 |
| 3. | கேட்டுணர்ந்த கதை, கதைப்பாடல்களின் தலைப்புகள், கதைமாந்தர்கள் பற்றி வினாக்கள் கேட்டல், கருத்தாடல் செய்து கருத்துகளை வெளிப்படுத்துதல். | 3, 6 |

## படித்தல்

| | | |
|---|---|---|
| 1. | தெளிவான ஒலிப்புடன் குறில் - நெடில் மயங்கொலி பிழைகளின்றிப் படித்தல் | 2, 8 |
| 2. | எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படித்தல் | 2, 8 |
| 3. | முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தக் குறியீடுகளை அறிந்து படித்தல். | 2, 8 |
| 4. | சூழல் சார்ந்து புதிய சொற்களின் பொருள் புரிந்து படித்தல். | 2, 6, 8 |

| திறன் பகுதி | திறன் | பாட எண் |
|---|---|---|
| **எழுதுதல்** | | |
| 1. | உரிய வடிவத்தில் முறையான இடைவெளிவிட்டு எழுதுதல் | அனைத்தும் |
| 2. | செய்தி / உரைநடைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து கருத்து தெரிவித்தல், கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுதல் | அனைத்தும் |
| 3. | புதிர்கள் துணுக்குகளுக்கு விடை எழுதுதல் | 9 |
| **நடைமுறை இலக்கணம்** | | |
| 1. | எழுத்துகளின் வகைகள் | 3 |
| 2. | ஒருமை, பன்மை வேறுபாடு அறிதல். (அது - அவை) | 5 |
| **கற்கக் கற்றல்** | | |
| 1. | சிறுவர்களுக்கான படவிளக்க அகரமுதலியைப் பயன்படுத்துதல் | |
| 2. | குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகள் விளையாடி மகிழ்தல் | 3, 4 |
| 3. | படக்கதைகளைப் படித்தல் | 3 |
| **படைப்புத்திறன்கள்** | | |
| 1. | ஒரே சொல்லில் தொடங்கும், முடியும் பல்வேறு சொற்களை உருவாக்குதல் | அனைத்தும் |
| **விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன்** | | |
| 1. | பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் | 2 |
| 2. | கூட்டுணர்வு | 8 |
| 3. | பிறர்க்கு உதவுதல் | 2 |